முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

26.07.2021, திங்கட்கிழமை

1. வாருங்கள் கலியுக மக்களே
   வாட்டம் நீங்கி தெளிவுபெற
   தாருங்கள் அரங்கன் தரும்
   தருமவழி பொருளுதவி செய்து
2. செய்துவர சிறப்பான மாற்றம்
   செகமதும் காணுமெனக் கூறி
   மெய்யுடனே துல்லிய ஆசியை
   மேலான பிலவ நள்ளி திங்கள்
3. திங்களிலே தசதிகதி சோமவாரம்
   (பிலவ வருடம் ஆடி மாதம் 10ம் நாள், 26.07.2021 திங்கட்கிழமை)
   தேசிகனுக்கு கணநாதர் யானுமே
   ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
   ஓங்கார குடில்படைத்து அருளும்
4. அருளும் அரங்கன் திருவடி
   அழியாமை தரும் மலரடி
   அருளும் அரங்கன் குடிலும்
   ஆறுமுகன் வாழும் சபையாகும்
5. ஆகவே தொடர்ந்து அனுகி
   அன்னமிட உதவி இனிதே
   மகான் அரங்கன் உபதேசமாக
   மக்கள் ஏற்று வருகவே
6. வருகவே எங்கும் வலுப்பெறும்
   வள்ளல் தன்மை நிறைந்தபடி
   தருமபலம் கூடிட உலகோர்
   தனித்துவம் பெற்று சிறப்பர்
7. சிறப்புடனே ஞானவழி தன்னை
   சேவையாக மக்களிடை விதைத்து
   மறுப்பின்றி எங்கும் விசாலமாக
   மாதவபலம் காட்டி அருளும்
8. அருளும் ஐயன் ஞானவழி
   ஆபத்தை வெல்லும் ஒரேவழி
   முருகா தலைவா என
   முழங்கி உலக மக்கள்வர

9. வருகவே உலகியல் துன்பம்
வதைக்கா விலகி ஓடும்
தருமம் தலைகாக்கும் என
தாக்கும் உயிர்பலி விலகி
10. விலகியே உலகம் பாதுகாப்பு
விரைந்து அரங்கனால் காணும்
கலகமான உலக பேதம்
கரைந்தோடி அமைதி பெருகி
11. பெருகியே பெரும் மாற்றம்
பேராசானால் உடன் நிகழும்
முருகா என வருக வருக
முழுமையான ஞானஆட்சி மலரும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–